www.padippakam.com

# அடிமைச் சாசனம்

ஒலிப்பேழையில் இடம் பெற்றுள்ள
பாடல்களின் தொகுப்பு

வெளியீடு

மக்கள் கலை இலக்கியக் கழகம்
தமிழ்நாடு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அடிமைச் சாசனம்

* * *

நாட்டை மறுகாலனியாக்கும்
காட் ஒப்பந்தம் மற்றும்
புதிய பொருளாதாரக்
கொள்கைக்கு எதிரான பாடல்கள்

* * *

**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**தமிழ்நாடு**

படிப்பகம்

www.padippakam.com

வைக்கப் பிரி முறுக்கி
சொக்கத் தங்க நெல்லெடுத்து
பக்குவமா கோட்ட கட்டி
பகஞ்சாணியால் மெழுகி
சோத்துக்கு கஷ்டமின்னு
தொட்டதில்லை கோட்ட நெல்ல - அது
நாத்துக்கு விட்ட நெல்லு
காத்திருக்கும் ஆடிவர

அந்த விதையும் நெல்லும் எங்களது - இந்த
வேரும் விழுதும் எங்களது - வெத
கோட்ட நெல்லுக்கு வரி வேணுமின்னு
கொட்ட மடிப்பவன் யாரது ?

( ஊரான்...........ஊரான் )

என் குடும்ப பாரமெல்லாம்
என் தோளில் நான் இழுக்க
என்ன அந்த ஏரிழுக்க
ஏரை எருதிழுக்க

சென்டு நெலமுமில்ல
செல்வாக்கும் ஏதுமில்ல - இந்த
மாடு ரெண்டும் இல்லையின்னா - நான்
மாரடிக்கனும் பண்ணையில



படிப்பகம்

www.padippakam.com

அந்த மருத நெலம் எங்களது - இந்த
மாடும் கன்னும் எங்களது - பசுங்
கன்னுக்கும் வரி கட்டணுன்னு
திட்டம் போட்டு வச்சவன் யாரது ?

( ஊரான்....ஊரான் )

மஞ்சள் இஞ்சி மூலிகையும்
மண்ணில் உள்ள வேர்களையும்
அருந்துற தண்ணீரையும்
மருந்தாகக் கண்டிருந்தோம்
மருந்தே உணவாக
உணவே மருந்தாக
இருந்தோம்....புரிந்திருந்தோம்
பரம்பரையாய்ப் பழகி வந்தோம்

அந்த மூலிகைகள் எங்களது - சித்தர்
மருத்துவமும் எங்களது - இது
வேலியில்லாக் காடல்ல - கள
வாட வந்தவன் யாரது ?

ஊரான் ஊரான் தோட்டத்திலே
உள்ளே வாரான் அமெரிக்கா
காயுங் கொடியும் என்னுதின்னா
கையிலெடுப்போம் வெட்டரிவா
கையிலெடுப்போம் வெட்டரிவா
கையிலெடுப்போம் வெட்டறிவா !



படிப்பகம்

www.padippakam.com

# நாடு முன்னேறுதுங்கிறான்

நாடு முன்னேறுதுங்கிறான் - அட
மினு மினு மினுக்கா ஜிலு ஜிலு ஜிலுக்கா
ஜெர்மன் அமெரிக்கா
ஜப்பான் கணக்கா

( நாடு முன்னேறுதுங்கிறான் )

தாகம் தீர கொக்கோ கோலா
போதை ஏற ஃபாரின் சீசா
மிக்க பண்ணிக்கோ பெப்சி லெகரு
மிச்ச வேலைக்கெல்லாம் மினரல் வாட்டரு
குடிக்கத் தண்ணியில்ல கொப்புளிக்க பன்னீரு
அட்ரா செருப்பால வீங்கிபுடும் செவிளு

( நாடு முன்னேறுதுங்கிறான் )

டிவியில் சிரிக்குது காம்ப்ளான் கேலு - டாக்டர்
தெனந்தரச் சொல்லுறான் பழம் முட்ட பாலு
வகை தெரியாம தின்னு அவன் புள்ள வீங்குது - வெறும்
விளம்பரத்த பாத்தே நம்ப புள்ள ஏங்குது
சத்துணவு தீந்திடுன்னு தட்டோட ஓடுது - இவன்
தட்டுக்கெட்ட திட்டமெல்லாம் என்னா புடுங்குது

( நாடு முன்னேறுதுங்கிறான் )



படிப்பகம்

காலைக் காப்பிக்கு மீனம்பாக்கம்
கக்கூசுக்கு போறான் லண்டன் மாநகரம்
ஈசலாட்டம் தனியார் விமானம்
இதுக்கே போலிசு கொட ஒண்ணு வேணும்
பேஞ்ச மழையில் எங்க ரோட்டையே காணும்- பெரிசா
பேச வந்துபுட்டான் தேச முன்னேற்றம்
( நாடு முன்னேறுதுங்கிறான் )

பள்ளிக் கூடமுன்னு போர்டு தொங்குது
பாத்தா மூணு சொவருதான் நிக்குது
பசங்களெல்லாம் மரத்தில தொங்குது
பாடம் நடத்துற டீச்சரு தூங்குது
காசுக்காரன் புள்ள கான்வென்டு போகுது- நம்ப
கார்ப்பரேசன் பள்ளியில சரக்குத்தான் ஓடுது
( நாடு முன்னேறுதுங்கிறான் )

அரசு மருத்துவ மனைங்க இருக்குது
ஆரம்ப வியாதியே அங்கதான் தொத்துது
ஆப்பரேசனின்னு வச்சிருக்கான் பேரு
அறுத்து போட்டுபுட்டு இல்லேங்கிறான் நூலு
காசுக்காரக் கூட்டம் அப்போலோ போகுது - நமக்கு
கவருமெண்டு இரக்கப்பட்டு போஸ்ட்மார்ட்டம் பண்ணுது
( நாடு முன்னேறுதுங்கிறான் )

ஏ.சி கூண்டுக்குள்ள பொம்மை வெரைக்குது - தங்க
ஊசிச் சேலை அதன் ஒடம்பில் மினுக்குது
நல்லி சாரதாஸ் கல்லா பிதுங்குது

வெள்ள எருமைங்கதான் உள்ளே உலாத்துது
பருத்தி நூலுக்கு கைத்தறி ஏங்குது - எங்க
பட்டினிச் சாவில் உன் பட்டு மினுக்குது
( நாடு முன்னேறுதுங்கிறான் )

காடும் மரமும் கடல் மீனும் தனியாரு
ரோடு கரண்டு டெலி போனும் தனியாரு - அரசு
ஆலைகள் அம்புட்டையும் கட்டிப்புட்டான்கூறு - அத
ஏலம் மூணுதரன்னு கூவுறான் சர்க்காரு - நம்ம
நாடுன்னு சொல்லிக்கிட மிச்சமென்ன கூறு - இவன்
ஆடுகிறான் ஆட்டுறவன் காட்டு தர்பாரு
( நாடு முன்னேறுதுங்கிறான் )

## காங்கிரஸ் என்றொரு

காங்கிரஸ் என்றொரு கட்சி - அவன்
கருமாதி எழவுக்குக் காலம் வந்தாச்சு
( காங்கிரஸ் )

கைராட்டை கதருன்னு சொன்ன
வெள்ளக்காரனின் கொள்ளைக்கு காவலா நின்ன
நாப்பத்தி ஏழுக்குப் பின்னே - நாட்ட
ஆக்கிட்ட கண்ட நாய் நக்கும் தொன்னை
( காங்கிரஸ் )

தொடங்கி வச்சார் காந்தி தாத்தா
உன் ஊழல் வரலாறு இன்னைக்கா நேத்தா

கொஞ்சம் உள்ளப் போயி எட்டிப் பார்த்தா - அங்க
உள்ளவன் எல்லாமே அர்சத்து மேத்தா

( காங்கிரஸ் )

ஏற்றுமதி பஞ்சு பேலு - உங்க
அம்பானி மில் மட்டும் அடிக்குது டாலு - இப்போ
நெசவுக்கு இல்லடா நூலு - நம்ம
நரசிம்ம ராவுக்கு எருமத் தோலு

( காங்கிரஸ் )

அமெரிக்கா ஜப்பான் ஜெர்மனி - அகிலமெல்லாம்
ஆரம்பிக்கிறோம் கம்பெனி
டாட்டா பிர்லா அம்பானி -மனமோகனசிங்கும்
கூட்டாளி தாண்டா ராவுஜி.........

" வரி.....வட்டி..... ராயல்டி
என்ன இது அநீதி ?
யார் நீ ? "
" ஹா..... என்னையா யாரென்று கேட்கிறாய்
அண்ட ரெண்டும் நடுங்கிட ஒடுங்கிட
கண்ட பேர்கள் கருகிட குறுகிட
வீர புஜபல பராக்கிரம சூரன் - டங்கல் "

வேட்டிய உருவுறான் டங்கல் - அத
போட்டோ புடிக்கிறான் அமெரிக்க அங்கிள்

www.padippakam.com

உன் பங்காளி தூக்குறான் செங்கல் - கடன்
பாரம் சொமப்பதோ பாட்டாளி நாங்கள்

( காங்கிரஸ் )

உனக்கு வாச்சானே மன்மோகன்சிங்கு - அவன்
வாயத் தொறந்தாலே அபாய சங்கு - ஒன்ன
ஆட்டுறான் அமெரிக்க பேங்கு - ஐயோ
மானம் போகுதடா தூக்குல தொங்கு

( காங்கிரஸ் )

## விதியை வென்றவர்கள்

விதியை வென்றவர்கள் யாரடா - அது
நக்சல் பாரிகள் தானடா
போராட்டம் எங்கள் உயிர் மூச்சு என்ற
வரலாற்று நாயகர்கள் யாரடா - அது
நக்சல் பாரிகள் தானடா

( விதியை வென்றவர்கள் )

ஏரு எருதோடு சேர்ந்து உழைத்தாலும்
நீயும் நிலமும் வெவ்வேறடா - அந்த
காலம் மாற்றி ஏரோட்டும் கையிலே
காட்டைச் சேர்ப்பவர்கள் யாரடா - அது
நக்சல் பாரிகள் தானடா

( விதியை வென்றவர்கள் )



படிப்பகம்

www.padippakam.com

சாதி நம்மீது சாபமா - கீழ்
வெண்மணி காயம் ஆறுமா - தினம்
வெந்து தணலாகும் எங்கள் சோதரரின்
நெஞ்சம் நாடுவது யாரடா - அது
நக்சல் பாரிகள் தானடா

( விதியை வென்றவர்கள் )

தாயகம் அருமைத் தாயகம் - ஈன்ற
வீரப்புதல்வர்கள் நூறடா - அந்த
காந்தியின் கபடராட்டை வென்ற - பகத்
சிங்கின் வாரிசுகள் யாரடா - அது
நக்சல் பாரிகள் தானடா

( விதியை வென்றவர்கள் )

கப்பம் என்ன உன் சட்டமா - எட்டப்பர்
கூட்டம் எமை ஆளுமா - நம்
கட்ட பொம்மன் உடல் தொட்ட மண்ணினைக்
காக்க நிற்பவர்கள் யாரடா - அது
நக்சல் பாரிகள் தானடா

( விதியை வென்றவர்கள் )

தீரனை புலித் தேவனை - சின்ன
மருதுவை ஈன்ற மண்ணடா - தமிழ்
வீரம் வீரம் எனும் வீடணர்களின்
வேரை அசைப்பவர் யாரடா - அது
நக்சல் பாரிகள் தானடா

( விதியை வென்றவர்கள் )



படிப்பகம்

எட்டுத் திக்கும் உன் எல்லையா
ஏகாதி பத்தியத்தியத்தின் கொள்ளையா- அந்த
செக்கிழுத்த வ.உ.சி - யின் கப்பல்
செலுத்த வந்தவர்கள் யாரடா - அது
நக்சல் பாரிகள் தானடா

( விதியை வென்றவர்கள் )

## ராமனுக்கு

காயாம்பூ மேனி- அவன்
கை தேர்ந்த வில்லாளி - அஞ்சிச்
சாயாத பேர்களுண்டோ - அயோத்தி
ராமனோட அம்பை எண்ணி
ஏழு கடல் தாண்டி
ஏழெட்டு மலை தாண்டி
சீறிப்பாயும் அம்பு- ஸ்ரீ
ராமச்சந்திர மூர்த்தி அம்பு
வாகா மறைஞ்சி நின்னு
வாலிய வதைச்ச அம்பு
நம்மள சாகாம சாகடிக்கும் அந்தச்
சதிகாரன் டங்கல் மேல- ரோசாப்
பூவாலே அம்பு செஞ்சு- பாத்து
நோவாமே வீசச் சொல்லு..........

ராமனுக்கு அவசரமா ஆள் அனுப்புடா- ரெண்டு
அம்பு விட்டு அமெரிக்காவ நெம்பச் சொல்லுடா

www.padippakam.com

புல்லாகி, பூடாகி
புழுவாகி மரமாகி
எல்லாமும் ஆகிநின்ற- உன்
எம்பெருமான் ஈசனுக்கும்
அண்டம் பேரண்டத்துக்கும்
அவதாரம் பத்துக்கும்
கொண்டாடா ராயல்டியின்னு......

கொண்டாடா ராயல்டியின்னு
மாடு வளத்தா- கன்னு எனக்குடா
கோழி வளத்தா - குஞ்சு எனக்குடா
மொட்டை உனக்குடா- முடி எனக்குடா
தத்தீம் தரிகிட தலாங்கு தரிகிட தா

கொண்டாடா ராயல்டியின்னு
கொடையிராண்டா டங்கல் இப்போ...........
( ராமனுக்கு )

காட்டு ஒப்பந்தமாம்- ராவு
கை நாட்டு வச்சுப்புட்டான் - டங்கல்
காலால் ஓர் அடி அளந்தான்
பூலோகத்தையே அமுக்கிப்புட்டான் - நீ
ஆட்டம் போட்ட அயோத்தியையும் - அவன்
பிளாட்டு போட்டு வச்சிருக்கான் - உன்
உலகளந்த பெருமாள் எங்கே.............



படிப்பகம்

உலகளந்த பெருமாள் எங்கே
மூணுஅடியில - பூமியளந்தவன்
மூக்கு முனையில் அதை - தூக்கி நின்னவன்
வானுக்கும் பூமிக்கும் - வளந்து நின்னவன்
தத்தீம் தரிகிட தலாங்கு தரிகிட தா

உலகளந்த பெருமாளை - கொஞ்சம்
உட்டுப்பாரு டங்கல் கிட்டே

( ராமனுக்கு )

அவமானச் சின்னமின்னே - நீ
ஆடுன ஆட்டமென்ன
கஜினியின்னே பாபரின்னே - கடப்
பாறைய நீ திட்டச் சொன்னே
வட்சியமே அயோத்தியின்னே - குண்ட
வச்சிப்புட்டு பஜனையின்ன - இப்போ
பாரதமே முழுகிடுச்சு - உன்
வீரமெங்கே ஒளிஞ்சுக்கிச்சு - அமெரிக்க
தூதரகம் தேடிப் போயி...........

தூதரகம் தேடிப்போயி
ஜோஷி எங்கடா - தேடிப்பாரடா
அத்வானி எங்கடா - ஆளைக் காணோண்டா
பிஜேபி எங்கடா - பம்முராங்கடா
தத்திம் தரிகிட தலாங்கு தரிகிட தா

அமெரிக்க துதரகத்துல................பேஷா
நடத்துடா கரசேவை ஒண்ணு

www.padippakam.com

ராமனுக்கு அவசரமா ஆள் அனுப்புடா - ஒங்க
ராமனுக்கு அவசரமா ஆள் அனுப்புடா - ரெண்டு
அம்பு விட்டு அமெரிக்காவ நெம்பச் சொல்லுடா

## கொள்ளையோ கொள்ளை

கொள்ளையோ கொள்ள - ஒரு
எல்லையே இல்ல............
முகமூடி மூஞ்சியில் இல்ல
கன்னக் கோலும் கையில இல்ல............
( கொள்ளையோ கொள்ள )

வாத்தியாரு ஆளு ஆளுது
அது தெரிஞ்ச சேதி
வாத்தியாரு கியூவு நீளுது
ஏமாந்தவன் பாதி
அம்மா ஆட்சியே சினிமா காட்சி
அம்பதாயிரம் பேர்களே சாட்சி
ஆசிரியர் பயிற்சிப்பள்ளி - நம்ம
அரங்கநாயகம் அழுவுறான் சொல்லி
( கொள்ளையோ கொள்ள )

கடல்மீனு வயலில் மொளைக்குது
அது எப்படி.....எப்படி
ஆனா.... கொட்லு வத்தி கொக்கே சாகுது
அது எப்படி......எப்படி
காவேரியில் கடல் நீரு பாயுது



படிப்பகம்

கடைமடையெல்லாம் எறால் மேயுது - எறால்
போவுது அமெரிக்கா தேடி நம்ம - சுறா
முழுங்குனது எத்தன கோடி

( கொள்ளையோ கொள்ள )

முட்டதின்ன புள்ள மெலியுது
நான் பாத்ததே இல்ல
திட்டம் போட்ட அம்மா பெருக்குது
இத என்னான்னு சொல்ல
சத்துணவு முட்டையெல்லாம் தட்டுல இளைக்குது
கட்டுகட்டா கரன்சி நோட்டு பொறிக்குது
முட்டைக்குள்ளே ரகசியம் நூறு..........
அந்த கட்அவுட்டையே கேட்டுப்பாரு

( கொள்ளையோ கொள்ள )

மலடிக்குப் புள்ள பொறக்குமா
அது யாருக்குத் தெரியும்
மந்திரிக்கு மானம் இருக்குமா
அது ஊருக்கே புரியும்
அவன் வேட்டியப்புடிச்சிக்கிட்டு வேனுல தொங்குறான்
இவ வேப்பிலய சுத்திக்கிட்டு வேண்டுதலுங்கிறா
வேட்டியென்ன வேப்பிலையென்ன - ஒரு
கூட்டமே அலையுது பொறுக்கித்தின்ன

( கொள்ளையோ கொள்ள )

www.padippakam.com

# கஞ்சி ஊத்த வக்கில்ல

கஞ்சி ஊத்த வக்கில்ல என்னடா கவர்மெண்டு
நாட்டைக் கொண்டு போயி வித்துப்புட்டு
என்னடா பார்லிமெண்டு
ஓட்டெதுக்கு....................சீட்டெதுக்கு
ஓடுங்கடா..................நாட்டவுட்டு

இந்த - ஒரு சாண் வயித்துக்குத்தான் இம்புட்டு பாடு
வயித்துல நெருப்பக் கொட்டிப்புட்டான் பாரு - நாங்க
ஒக்கார வச்சி சோறு போடச் சொல்லி கேட்டமா
ஓசியில உப்புபுளி மொளகாதான் கேட்டமா - ஏண்டா
சிக்காத புதிராடா வெலவாசி உயர்வு நீ
ஒக்காந்து திங்கிறவன் ஒனக்கென்ன நோவு
( கஞ்சி ஊத்த வக்கில்ல )

கருவக் காடெல்லாம் கட்டடமா போச்சு
வெளிய போறதே பெரும்பாடா ஆச்சு
ஒண்ணுக்குப் போகக் கூட இருட்டணும் பொழுது
பொம்பளைங்க பாடு பொறந்ததே தவறு
கட்டணக் கழிப்பிடன்னு பஸ்டாண்டில் இருக்கு
காலுகழுவ ஒரு கல்லு தாண்டா கெடக்கு
நகராட்சி வளந்து மாநகராட்சி
நாலணா வளந்து ஒரு ரூபா ஆச்சு - அட
கக்கூசுக்கும் கூடவா வெலவாசி உயர்வு - அதுக்கும்
காட்டு ஒப்பந்தத்தில கண்டிசனா இருக்கு
( கஞ்சி ஊத்த வக்கில்ல )



படிப்பகம்

எம்ப்ளாய்மெண்டு ஆபிசின்னு ஊருக்கூரு இருக்கு
அத - நம்பினவன் கழுத்துக்கு நிச்சயமா சுருக்கு
சுவரெல்லாம் தொங்குதடா சுயவேல வாய்ப்பு
கவர்மெண்டு வேலைக்கு வச்சிப்புட்டான் ஆப்பு
ஆட்ட மாட்ட வித்துத்தானே காலேசு படிச்சோம் - இப்போ
வாத்து வளக்கவாடா எம்ப்ளாய்மெண்டில் பதிஞ்சோம்
அட - பன்னிக்கு எதுக்குடா தங்கத்தில மூக்குத்தி - வெறும்
பம்மாத்து எதுக்குடா தள்ளுங்கடா இடிச்சி

( கஞ்சி ஊத்த வக்கில்ல )

ரேசன் கடையின்னு வச்சிருக்கான் பேரு - இந்த
தேசத்தின் பெருமையை அங்க வந்து பாரு - இப்போ
கவர்மெண்டு சீமெண்ணெய்க்கு அடிச்சிட்டான் கலரு
கறுப்பு மார்க்கெட்டுக்கு கொடுத்திட்டான் பவரு
புழுங்கலு குருணை பச்சரிசி நொய்யி - ஒங்க
புழுத்த அரிசி வாங்க ஏழெட்டு பையி
ரேசன் கடையின்னு சொல்லாதடா பொய்
கோதுமை பாமாயில கொண்டு வந்து வய்யி
பாதிய முழுங்குற படிக்கல்லு தூங்குது - செஞ்ச
பாவத்துக்கு தண்டனையா தெராசு தொங்குது - கடை
மீதியையும் மூடச்சொல்லி அமெரிக்கா நோண்டுது - நம்ம
புரட்சித் தலைவி ஆட்சி பூட்டைக் காட்டுது

( கஞ்சி ஊத்த வக்கில்ல )

சோறு போட வக்கில்லாத ராசா மகராசா - இத
சொர்க்கமின்னு சொல்லுறானே கேக்குறவன் லூசா

வேலதர வக்கில்லாத ராசா மக.....ராசா
ஊர மேய்க்க ஆசைப்பட்டா அது என்ன லேசா
நடக்கப் படிக்கத் தண்ணி குடிக்கவும் காசா
நாயி கணக்கா வரி புடுங்கத்தான் அரசா
சொடக்கு போடுறான் அமெரிக்கா லேசா- சும்மா
சொழண்டு ஆடுறான் இவன் சுதந்திர அரசா- நாம
குனியக்குனிய இவன் குட்டுறது புதுசா- மக்கள்
இணைய இணைய திரை விலகிடும் முழுசா
( கஞ்சி ஊத்த வக்கில்ல )

## வெட்டரி வாள் எடடா

வெட்டரிவாள் எடடா- எடடா
ரத்தம் கொதிக்குதடா- இந்த
சட்டமும் சர்க்காரும் தடுத்தா
வெட்டி எறிந்திடடா

காடு மலை நதிய- அந்த
ஆண்டவனா படைச்சான்- எல்லாம்
போகுது கப்பலிலே அதை எந்த
ஈசன் வந்து தடுப்பான்
நூறு தலைமுறைய தாயாகி காத்த மலைகளடா
அந்தத் தாயை ஓர் அன்னியன் ஆளத்துடிக்கிறான்
பாத்து நிக்கிறியேடா - எடடா
( வெட்டரிவாள் )

அடிவானம் வரை விரிந்த  வயலை
ஆண்டையாடா உழுதான்- அன்று

ஆங்கிலேயன் நுழைந்தான் - அதை எந்த
வாண்டையாரு தடுத்தான்
மண்ணின் பசுமையெல்லாம் நம்முடைய
ரத்தத்தில் தோய்ந்ததடா - இந்த
மண்ணை விட்டு நம்மை
அன்னியன் பிரிக்க
பாத்து நிக்கிறியேடா - எடடா

( வெட்டரிவாள் )

ஆலையில் சுத்தியலை எந்த - முத
லாளியடா பிடித்தான் - வெள்ளை
ஆதிக்கம் கால் பதிக்க
பிர்லாவும் டாட்டாவுமா தடுத்தான் - இந்தத்
தோளின் வலிமையிலே நாட்டின்
தொழிற் சாலைகள் நிற்குதடா - அந்த
ஆலைகள் அன்னியன்
கால்களில் வீழ்ந்திட
பாத்து நிக்கிறியேடா எடடா

( வெட்டரிவாள் )

ஏட்டில் சுதந்திரத்தைக் காட்டிவிட்டு
நாட்டை அடகு வைத்தான் - இன்று
காட் ஒப்பந்தமெனும் - அடிமைச்
சாசனம் ஏற்றுக் கொண்டான்
சீறும் கடலலைகள் - உரிமையை
யாசித்து நின்றதுண்டா - நாம்
கோரும் சுதந்திரத்தை - வென்றுதரக்
கோழைகள் நின்றதுண்டா - நம்
போரில் புதிய ஜனநாயகம்
சீறி எழுகுது பார்
அதிகாரம் நமதடா
நாடும் நமதடா
வாளினை நீ எடடா - எடடா

( வெட்டரிவாள் )

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

மக்கள்
கலை இலக்கியக் கழக வெளியீடு

முதற்பதிப்பு

ஆகஸ்டு '94

விலை ரூ. 2/-

பிரதிகள் வேண்டுவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை 600 049.

படியுங்கள்

புதிய கலாச்சாரம்
ம.க.இ.க.வின் மாத இதழ்

புதிய ஜனநாயகம்
மாதமிருமுறை அரசியல் ஏடு

படிப்பகம்